தமிழ்மொழி

ஆண்டு 5

கற்றல் தரம் : 3.6.12

தொகுதி 12, பாடம் 3 (பக்கம் 94)

பாடநூலில் கொடுக்கப்பட்ட சட்டகத்தின் துணையுடன் கருத்துகளை நிரல்படுத்தி எண்களிடுக. பிறகு கருத்துகளைக் கொடுக்கப்பட்ட இடத்தில் நிரலாக அடுக்கவும்.

**சிலர் வீடு, நிலம், வாகனம், சொத்து போன்றவற்றை வாங்க எண்ணம் கொள்வர். அவர்கள் அவற்றை வாங்குவதற்கு முன் முன்பணம் கட்ட வேண்டும். அத்தகைய தருணங்களில் நமக்கு உதவியாக அமைவது நம் சேமிப்புப் பணம் என்பது வெள்ளிடைமலை. இதனுடன், நாம் பிறருக்கு நன்கொடை அல்லது உதவி செய்ய எத்தனிக்கும் வேளையில் நம் சிந்தைக்கு எட்டுவது சேமிப்புப் பணம் தானே.......**

**மனிதனுக்குப் பணத்தின் தேவை எப்போதும் இருக்கும். 'ஒரு காசு பேணின் இருகாசு தேரும்' எனும் பழமொழிக்கேற்ப சிறுகச் சிறுக சேர்க்கும் சேமிப்புப் பணம் தேவையான நேரத்தில் பயன்படுகிறது என்பதே உண்மை. கல்வி கற்கும் மாணவனுக்குப் புத்தகம் வாங்க, பள்ளிக்கட்டணம் கட்ட, உயற்கல்வி படிப்பு, பட்டமளிப்பு விழா என மானிடனின் தேவை அதிகரித்துக் கொண்டே போகிறது. இங்கே சேமித்த பணம்தான் கைக்கொடுக்கிறது.**

LIVEWORKSHEETS

இந்நவீன காலத்தில் பணம் இல்லாமல் வாழவே முடியாது. பணம் பத்தும் செய்யும். பணம் இல்லாதவர் பிணத்திற்குச் சமம். மானிடராய் பிறந்த நாம், நல்வழியில் தேடிய பணத்தின் ஒரு பகுதியைச் சேமிப்பது சிறப்பாகும்.

மாணவர்களாகிய நாம், சேமிப்பின் பயன் அறிவது அவசியம். சேமிப்புப் பிற்காலத்தில் பல தேவைகளுக்குப் பயன்படும் என்பதை அறிந்து, பணத்தைச் சிறுகச் சேர்த்துப் பெருக வாழ வேண்டும் என்பது அனைவரின் பொறுப்பாக இருக்க வேண்டும்.

வயதான காலத்தில் பெற்றொருக்கு மருத்துவச் செலவிற்குப் பணம் அதிகம் தேவைப்படும். மேலும், அவர்களைப் பல இடங்களுக்கு அழைத்துச் செல்லவும் நம் பணம்தான் பயன்படுகிறது. இதைத் தவிர, நாம் உபயோகிக்கும் வாகனங்கள் பழுதாகும் போது உண்டாகும் திடீர் செலவுகளுக்கும் பணம் தேவைப்படுகிறது. இந்தச் செலவுகளுக்கு நாம், நம் சேமிப்புப் பணத்தைதான் நம்பி இருக்கவேண்டியுள்ளது.

LIVEWORKSHEETS

பத்தி 1

பத்தி 2

LIVEWORKSHEETS

பத்தி 3

பத்தி 4

பத்தி 5

LIVEWORKSHEETS